## Basic Tamil Notes Part 3

**பிரித்தெழுதுக.**

கடனறிந்து - கடன் + அறிந்து

யாதெனின் - யாது + எனின்

எந்நலம் - எ + நலம்

துலையல்லார் - துலை + அல்லார்

சால்பென்னும் - சால்பு + என்னும்

இளிவன்று - இளிவு + அன்று

ஒருவற்கு - ஒருவன் + கு

ஈண்டினியான் - ஈண்டு + இனி+ யான்

காண்டகு - காண் + தகு

சேவடி- செம்மை + அடி

வெவ்விருப்பாணி - வெம்மை + இரும்பு + ஆணி

மற்றிரண்டு - மற்று + இரண்டு

குருசேற்றி - குருசு + ஏற்றி

தன்னரிய - தன் + அரிய

தவிப்பெய்தி - தவிப்பு + எய்தி

எந்தாய் - எம் + தந்தாய்

இத்தகைய - இ + தகைய

மனநலம் - மனம் + நலம்

இருப்புமுளை - இரும்பு + முளை

ஈண்டிவரே - ஈண்டு + இவரே

பங்கிட்டார் - பங்கு + இட்டார்

எழுத்திட்டார்- எழுத்து + இட்டார்

மாவிலை - மா + இலை

பெருவிழா - பெருமை + விழா

அச்சாணி - அச்சு + ஆணி

நன்னாள் - நன்மை + நாள்

சிற்றூர் - சிறுமை + ஊர்

நன்மொழி - நன்மை + மொழி

புறச்சூழல் - புறம் + சூழல்

முக்கனி - மூன்று + கனி

நன்றியுணர்வு - நன்றி + உணர்வு

இந்நாளில் - இ + நாளில்

செந்நெல் - செம்மை + நெல்

செங்கரும்பு - செம்மை + கரும்பு

புதுப்பானை - புது + பானை

ஓரிட்த்தில் - ஓர் + இடத்தில்

**பொருள் கூறுக.**

திங்கள் - மாதம்

துய்த்து - அனுபவித்து

எழுகதிர் - உதயசூரியன்

வேட்டல் - விரும்புதல்

வாடை - வடக்கில் இருந்து வீசும் குளிர்காற்று.

முக்கனி - மா, பலா, வாழை ஆகிய கனிகள்

நேயம்- அன்பு

தொன்மை - பழைமை

**இலக்கணக்குறிப்பு எழுதுக.**

என்ப - பலர்பால் வினைமுற்று

மேற்கொள்பவர், ஆற்றுவார், மாற்றார் - வினையாலனையும் பெயர்கள்

உள்ளதூஉம் - இன்னிசையளபெடை

அன்று - குறிப்பு வினைமுற்று

குணநலம் - ஆறாம் வேற்றுமைதொகை

நலன் - நலம் என்பதன் ஈற்றுப்போலி

கண்ணோட்டம், ஒப்புரவு - தொழிற்பெயர்கள்

கொல்லா, சொல்லா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்

படையும் - உம் - இறந்த்து தழீஇய எச்சம்.

எம்பெருமான், குலவேந்தன் - நான்காம் வேற்றுமைத்தொகைகள்

செங்கை, சேவடி, வெவ்விருப்பு, வன்மறவர், இரும்பொறை - பண்புத்தொகைகள்

இருப்பு(இரும்பு), சொற்ற(சொன்ன), நச்சு(நஞ்சு) - வலித்தல் விகாரங்கள்.

இருப்பாணி (இரும்பால் ஆகிய ஆணி) - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை.

மற்றிரண்டு - இடைச்சொல் தொடர்

நிலங்கீண்டு, உடைகளைந்து - இரண்டாம் வேற்றுமைத் தொகைகள்

திருடரையும் -இறந்தது தழீஇய எச்சவும்மை

குருசேற்றி - ஏழாம் வேற்றுமைத்தொகை

குருசுமிசை -ஏழாம் வேற்றுமை உருபு

எந்தாய் - 'எம் தந்தையே' என்பதன் மரூஉ.

கனிவாய், நச்சுமனம் - உவமைத்தொகைகள்

அருள்வள்ளல் -இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

குணமிலார் (இல்லார்) - இடைக்குறை

சொற்றமறை - இறந்த காலப் பெயரெச்சம்.

வேண்டுமோ - 'ஓ' காரம் எதிர்மறை ஓகாரம்.

வேறொன்றே - 'ஏ' காரம் வினாப்பொருள் ஏகாரம்.

பன்னரிய(பன்ன + அரிய)- 'பன்ன' என்பதில் 'ன' வில் உள்ள 'அ' கரம் தொக்கது ; தொக்கது ; தொகுத்தல் விகாரம்.

பாடு(படு) - முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

பொறை -பண்புப்பெயர்

செத்தவரைத் துஞ்சினவர் எனல் - அமங்கலத்தை மங்கலமாய்க் கூறும் தகுதி வழக்கு.

எனவுரைக்கும் சீர்மைத்து -குறிப்பு வினைமுற்று

உரைக்கும் - 'செய்யும்' என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று

இவர்க்கு மன்னியும் (இவரை) - உருபு மயக்கம்.

இன்மை, தின்மை - பண்புப்பெயர்கள்

இருநிலம் - பண்புத்தொகை

வெண்குடை - பண்புத்தொகை

துஞ்சான் - முற்றெச்சம்

கல்லா ஒருவற்கும் -ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

கடுமா - உரிச்சொல்தொடர்

நாழி - முகத்தல் அளவை ஆகுபெயர்

ஈதல் - தொழிற்பெயர்

துய்ப்போம் - தன்மைப்பன்மை வினைமுற்று

யாமத்தும் பகலும் - 'உம்'மை எண்ணும்மை

கல்லா ஒருவற்கும் - 'உம்'மை இழிவு சிறப்பும்மை

**உறுப்பிலக்கணம் எழுதுக.**

அறிந்து - அறி + த் (ந்)+ த்+ உ

அறி - பகுதி ; த் - சந்தி ; 'ந்' ஆனது விகாரம் ; த் - இறந்தகால இடைநிலை; உ - வினையெச்ச விகுதி

துஞ்சான் - துஞ்சு + (ஆ) + ஆன்

துஞ்சு - பகுதி ; ஆ - எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்ட்டு விகாரம்; ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

ஈதல் - ஈ + தல்

ஈ - பகுதி ; தல் - தொழிற்பெயர் விகுதி

துய்ப்போம் - துய் +ப் - ப் + ஏம்

துய் - பகுதி ; ப் - சந்தி ; ப் - எதிர்கால இடைநிலை; ஏம் - தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி.

தீண்டினார் - தீண்டு + இன் +ஆர்

தீண்டு - பகுதி ; இன் - இறந்தகால இடைநிலை ; ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

கடாவினார் - கடாவு + இன் + ஆர்

கடாவு - பகுடி; இன் - இறந்தகால இடைநிலை ; ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

நிறுத்தினார் - நிறுத்து + இன் + ஆர்

நிறுத்து - பகுதி ; இன் - இறந்த காஅல இடைநிலை ; ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

ஏற்றி - ஏற்று + இ

ஏற்று - பகுதி ; இ - வினையெச்ச விகுதி

ஊன்றிய - ஊன்று _ இ(ன்) +ய் + அ.

ஊன்று - பகுதி; இ(ன்) - இறந்தகால இடைநிலை , ன் கெட்ட்து விகாரம் ; ய் - சந்தி ; அ - பெயரெச்ச விகுதி.

தாங்காது - தாங்கு + ஆ + த் + உ

தாங்கு - பகுடி ; ஆ- எதிர்மறை இடைநிலை ; த் - எழுத்துப் பேறு ; உ - வினையெச்ச விகுதி

நாடி - நாடு + இ

நாடு - பகுதி ; இ - வினையெச்ச விகுதி

பெயரார் - பெயர் + ஆ + ஆர்

பெயர் - பகுதி ; ஆ - எதிர்மறை இடைநிலை ; ஆர் - படர்க்கை பலர்பால் வினைமுற்று விகுதி.

ஆற்றுவார் - ஆற்று + வ் + ஆர்

ஆற்று - பகுதி ; வ் - எதிர்கால இடைநிலை ; ஆர் - பலர்பால் வினைமுற்று விகுடி.

பணிதல் - பணி + தல்.

பணி - பகுதி ; தல் - தொழிற்பெயர் விகுதி.

**கோடிட்ட இடத்தில் உரிய எழுத்தினைக்கொண்டு நிரப்புக.**

**1. தெ_கடல் வளாகம் பொடுமை இ_றி (ண்/ந்/ன்)**

விடை: தெ**ண்**கடல் வளாகம் பொதுமை இ**ன்**றி.

**2. வெண்குடை நிழற்றிய ஒருமையோ_க்கும் (ர்/ற்)**

விடை: வெண்குடை நிழற்றிய ஒருமையோ**ர்**க்கும்.

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. நற்குணங்களால் சிறந்திருத்தல் _________ பெருமையாகும்.

விடை: சான்றோர்க்குப்

2. தவம் என்பது _________

விடை: பிற உயிர்களைக் கொல்லாமை

3. தொல்வியை ஒப்புக்கொள்வதே சான்றாண்மையை அளந்தறியும் _____

விடை: உரைகல்

4. மாற்றார் என்னும் சொல்லின் பொருள் _____

விடை: பகைவர்

5. தீங்கிழைத்தவர்க்கும் _________ செய்தல் வேண்டும்.

விடை: இனியவை

6. நாங்கள் என்னும் தன்மைப் பன்மைப்பெயர் 'ஐ' என்னும் வேற்றுமை உருபு ஏற்கும்போது ________எனத் திரியும்.

விடை: எங்களை

7. நான், யான் என்பவை _______ பெயர்கள்.

விடை: தன்மை ஒருமைப் பெயர்கள்

8. நாம் என்னும் தன்மைப் பன்மைப்பெயர் வேற்றுமை உருபு ஏற்கும்போது ________ எனக் குறுகும்.

விடை: நம்

9. வேற்றுமை _________ வகைப்படும்.

விடை: எட்டு

10. ஏழாம் வேற்றுமைக்குரிய உருபு ________

விடை: கண்

11. முன்னிலை ஒருமைப்பெயர் __________ ஆகும்.

விடை: நீ

12. நாம் என்னும் தன்மைப் பன்மைப்பெயர் _________எனக் குறுகும்.

விடை: நம்

13. தாம் என்னும் படர்க்கைப் பன்மைப்பெயர் _______ எனத் திரிந்து வேற்றுமையுருபு ஏற்கும்.

விடை: தம்

14. எழுகதிரைப் போற்றி வணங்குகின்ற _________ திருநாள்தான் பொங்கல்.

விடை: உயிர்ப்புள்ள

15. உணர்வுகள் ஒட்டுமொத்தமாய்ப் பொங்கிப் பெருகிடும் _______ பொங்கல் நன்னாள்.

விடை: பொன்விழாவே

**பொருத்துக.**

1. இன்மை - வலிமை

திண்மை - வறுமை

ஆழி - தவம்

நோன்மை - கடல்

விடை:

இன்மை - வறுமை

திண்மை - வலிமை

ஆழி - கடல்

நோன்மை - தவம்

2. தன்மை ஒருமை - தாங்கள்

தன்மைப் பன்மை - தான்

முன்னிலை ஒருமை - யான்

படர்க்கை ஒருமை - நாம்

படர்க்கைப் பன்மை - நீ

விடை:

தன்மை ஒருமை - யான்

தன்மைப் பன்மை - நாம்

முன்னிலை ஒருமை - நீ

படர்க்கை ஒருமை - தான்

படர்க்கைப் பன்மை - தாங்கள்

3. இயல்பு புணர்ச்சி - கற்கோட்டை

தோன்றல் விகாரம் - மரவேல்

கெடுதல் விகாரம் - வாழைப்பழம்

திரிதல் விகாரம் - பொன்வளையல்

விடை:

இயல்பு புணர்ச்சி - பொன்வளையல்

தோன்றல் விகாரம் - வாழைப்பழம்

கெடுதல் விகாரம் - மரவேல்

திரிதல் விகாரம் - கற்கோட்டை

4. கூழை - 1, 3, 4 சீர்களில் வரும்

மேற்கதுவாய் - 1, 2, 3, 4 சீர்களில் வரும்

கீழ்க்கதுவாய் - 1, 2, 3 சீர்களில் வரும்

முற்று - 1, 2, 4 சீர்களில் வரும்

விடை:

கூழை - 1, 2, 3 சீர்களில் வரும்

மேற்கதுவாய் - 1, 3, 4 சீர்களில் வரும்

கீழ்க்கதுவாய் - 1, 2, 4 சீர்களில் வரும்

முற்று - 1, 2, 3, 4 சீர்களில் வரும்

**எதுகை, மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.**

1. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
   மாற்றாரை மாற்றும் படை.

**ஆ**ற்றுவார், **ஆ**ற்றல் - மோனைச் சொற்கள்

**மா**ற்றாரை, **மா**ற்றும் - மோனைச் சொற்கள்

ஆ**ற்**றுவார், ஆ**ற்**றல் - எதுகைச் சொற்கள்

மா**ற்**றாரை, மா**ற்**றும் - எதுகைச் சொற்கள்

ஆ**ற்**றுவார், மா**ற்**றாரை - எதுகைச் சொற்கள்

2. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
   தாங்காது மன்னோ பொறை.

**சா**ன்றவர், **சா**ன்றாண்மை - மோனைச் சொற்கள்

சா**ன்**றவர், சா**ன்**றாண்மை - எதுகைச் சொற்கள்

**மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.**

**நோன்மை நலத்த சால்பு சொல்லா**

**கொல்லா பிறர்தீமை நலத்தது.**

விடை:

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை

சொல்லா நலத்தது சால்பு.

**நீ என்னும் முன்னிலைப்பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது அடையும் மாற்றத்தை எழுதுக.**

நீ + ஐ - நின்னை நீ + ஆல் - நின்னால்

நீ + கு - நினக்கு நீ + இன் - நின்னின்

நீ + அது - நினது நீ + கண் - நின்கண்

நீ + ஐ - உன்னை நீ + ஆல் - உன்னால்

நீ + கு - உனக்கு நீ + இன் - உன்னின்

நீ + அது - உனது நீ + கண் - உன்கண்

**கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

1. யான் என்னும் தன்மை ஒருமைப்பெயர் வேற்றுமை உருபு ஏற்கும்போது _______ எனத் திரியும்.

அ. உன் ஆ. என் இ. நின்

விடை: என்

2. தாம் என்னும் படர்க்கைப் பன்மைப்பெயர் வேற்றுமை உருபு ஏற்கும்போது _______ எனத் திரியும்.

அ. எம் ஆ. உம் இ. தம்

விடை: தம்

3. நீர், நீவிர், நீயிர், நீங்கள் ஆகியன ________ பெயர்கள்

அ. முன்னிலை ஒருமை ஆ. முன்னிலை பன்மை இ. தன்மைப் பன்மை

விடை: முன்னிலைப் பன்மை

4. வாழை + மரம் = வாழைமரம் என்பது________

அ. இயல்பு புணர்ச்சி ஆ. விகாரப் புணர்ச்சி இ. உடம்படுமெய்

விடை: இயல்புப் புணர்ச்சி

5. மரம் + வேர் = மரவேர். இது __________

அ. தோன்றல் விகாரம் ஆ. திரிதல் விகாரம் இ. கெடுதல் விகாரம்

6. கன்று + ஆ என்பது _________ எனப் புணரும்.

அ. கற்றா ஆ. கன்றா இ. கறா

விடை: கற்றா

7. தொடை ________ வகைப்படும்.

அ. ஆறு ஆ. ஏழு இ. எட்டு

விடை: எட்டு

8. முதலாம் மூன்றாம் நான்காம் சீர்களில் மோனை ஒத்து வருவது________

அ. முரண் ஆ. மேற்கதுவாய் இ. கீழ்க்கதுவாய்

விடை: மேற்கதுவாய்

9. அளவடிக்கு _______ என்னும் வேறு பெயருண்டு.

அ. குறளடி ஆ. சிந்தடி இ. நேரடி

விடை: நேரடி

10. இணையெதுகை என்பது ______ சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.

அ. 1, 2 ஆ. 1,3 இ. 1, 4

விடை: 1, 2

| வ.எண் | சொல் | புணர்ச்சியின் வகை |
|---|---|---|
| 1. | இணையம் + தளம் = இணையதளம் | கெடுதல் புணர்ச்சி |
| 2. | திரு + குறள் = திருக்குறள் | தோன்றல் விகாரப் புணர்ச்சி |
| 3. | கடல் + கரை = கடற்கரை | திரிதல் விகாரப் புணர்ச்சி |
| 4. | நாடு + பண் = நாட்டுப்பண் | 'ட' கர குற்றியலுகரப் புணர்ச்சி |
| 5. | ஆறு + மணல் = ஆற்றுமணல் | 'ற' கர குற்றியலுகரப் புணர்ச்சி |
| 6. | செம்பு + பட்டயம் = செப்புப்பட்டயம் | மென்தொடர் வேற்றுமை குற்றியலுகரப் புணர்ச்சி |

**கீழ்க்காணும் தொகைச்சொற்களை விரித்தெழுதுக.**

**ஐந்திணை, முக்காலம், நாற்றிசை, ஈரெச்சம்**

**விடை:**

மூவேந்தர் - சேரர், சோழர், பாண்டியர்

ஐந்திணை - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

முக்காலம் - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்

நாற்றிசை - கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு

ஈரெச்சம் - பெயரெச்சம், வினையெச்சம்

1. அகிலம் போற்றும் வகையில் நம் இந்தியா வளர்ச்சி அடைந்து வருகின்றது.

அகிலம் (வையம்)

2. பார்வை நேரம் முடிந்ததனால், மாவட்ட ஆட்சியரைப் பார்க்க அனுமதி மறுக்கப்பட்டது.

அனுமதி (இசைவு)

3. பண்டைக்காலத்தமிழர் வில், வேல், வாள் முதலிய ஆயுதங்களை ஏந்திப் போர் புரிந்தனர்.

ஆயுதங்கள் (போர்க்கருவிகள்)

4. சான்றோர் கூறும் உபதேசங்கள் நம் வாழ்க்கைக்கு ஏற்றமளிப்பவை.

உபதேசங்கள் (அறிவுரைகள்)

5. மாறனுக்கு அரசு வேலை கிடைத்ததனால் கம்பீரத்துடன் ஊரை வலம் வந்தான்.

கம்பீரம் (வீறு)

6. நாம் எழுதுவதற்குக் காகிதங்களைப் பயன்படுத்துகிறோம்.

காகிதங்கள் (தாள்கள்)

7. 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது ஔவை மொழி.

திரவியம் (செல்வம்)

8. செய்தித்தாளுக்குச் செய்திகளைத் திரட்டித் தருவதில் நிருபரின் பங்கு இன்றியமையாதது.

நிருபர் (செய்தி திரட்டுபவர்)

9.'நீதிக்குத் தலை வணங்கு' என்பது ஆன்றோர் வாக்கு.

நீதி (அறநெறி)

10. ஒரு வருடத்துக்குப் பன்னிரண்டு மாதம் உள்ளன.

மாதம் (திங்கள்)

| வ. எண் | தொடர் | பொருள் |
| --- | --- | --- |
| 1 | கரையில் இருப்பது கயிராகவும் இருக்கலாம் | ஐயம் |
| 2 | கால்நடையும் தீண்டாத செடி | இழிவு |
| 3 | கவினும் எழிலும் முகிலும் தேர்வு எழுத வந்தனர் | எண் |
| 4 | உண் கையிலுள்ள நூல் திருக்குறளுமன்று திருவாசகமுமன்று | எதிர்மறை |
| 5 | சேரனுக்கு இருவிழியும் சிவந்தன | முற்று |
| 6 | பூப்பூத்துக் காயும் காய்த்தது | தெரிநிலை |
| 7 | கருத்தரங்க்க் கூட்டத்துக்குச் சிறப்பு விருந்தினரும் வந்துவிட்டார் | எச்சம் |